# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 39/2015 | வா.சா | 1 |
| பெயர் : | சோலையம்மாள் | க/பெ | ராஜேந்திரன் |
| தாலுகா : | நத்தம் | கிராமம் | ஏரக்காபட்டி |
| தேதி : | 04.02.2026 | வயது | 51/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :

<u>5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) வழக்கை எனது தாயார் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது தாயார் பிராதில் தெரிவித்துள்ள விபரங்கள் பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, எனது தாயார் விபரங்கள் சொல்லி எனக்கு தெரியும். எனக்கும் வழக்கில் உள்ள மற்ற வாதிகளுக்கும் மன வருத்தம் எதுவும் இன்றி சுமூகமாக இருக்கிறோமா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி எனது மாமியார். 2ம் பிரதிவாதி எனது கணவர். 3, 4 பிரதிவாதிகள் எனது நாத்தனார். எனக்கும், இந்த வழக்கின் 3, 4 பிரதிவாதிகளுக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை. ஆனால் 1, 2 பிரதிவாதிகளுடன் சுமூக உறவில் உள்ளேன். எனக்கு திருமணமாகி சுமார் 37 வருடம் இருக்கும். திருமணம் ஆன நாள் முதல் நானும், எனது கணவரும் ஒன்றாக ஒரே வீட்டில் தான் இருந்தோம் என்றால் சரிதான். எனது மாமியார் என்னுடன் இருந்தாரா என்றால் இல்லை, தனியாக இருந்தார். எனது தாயார் தாக்கல் செய்த பிராதில் 5ம் பிரதிவாதி என்ன ஆட்சேபணை தெரிவித்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 5ம் பிரதிவாதியை தவிர வேறு எந்த பிரதிவாதியும் இவ்வழக்கில் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் மூலமாகவாவது 5ம் பிரதிவாதி என்ன சொல்லியுள்ளார் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

3) 5ம் பிரதிவாதியானவர் 1 முதல் 4 மற்றும் 6ம் பிரதிவாதிக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.116/2006 என்ற விளம்புகை பரிகார வழக்கை

தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி தெரியாது. அந்த வழக்கில் 5ம் பிரதிவாதிக்கு ஆதரவாக விளம்புகை பரிகாரம் வழங்கப்பட்டதால் அதனை எதிர்த்து மேற்படி பிரதிவாதிகள் திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் A.S.No.108/2010 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கானது கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பை ஊர்ஜிதப்படுத்தி மேல்முறையீட்டு வழக்கை 29.02.2012ம் தேதி தள்ளுபடி செய்தது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி தள்ளுபடி செய்த வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சாட்சி தெரிவிக்கின்றார்.

4) எனது கணவர் மேற்படி வழக்கு பற்றிய விபரங்கள் என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. எனது கணவரும், மாமியாரும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 5ம் பிரதிவாதிக்கு இவ்வழக்கில் கண்ட சொத்துக்களை பொறுத்து எவ்வித இடையூறும் செய்யமாட்டோம் என்று எழுத்துப்பூர்வமாக எழுதிக்கொடுத்து வந்தது சம்பந்தமாக தெரியுமா என்றால் தெரியாது. இந்த நீதிமன்றத்தில் 5ம் பிரதிவாதி எனது கணவர் மற்றும் மாமியாருக்கு எதிராக தாக்கல் செய்த சிவில் அரெஸ்ட்டில் அமீனா மூலமாக கைது செய்யப்பட்டு இந்த நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவரது வயோதிகம் காரணமாக எனது உதவியுடன்தான் நீதிமன்றத்தில் ஆஜரானார் என்றாலும், நான் நீதிமன்றத்தில் அவரது சார்பாக பேசினேன் என்றாலும் சரியல்ல, எனது கணவர், எனது மாமியாரை நீதிமன்றத்திற்கு உதவியாக அழைத்து வந்திருப்பார்.

5) வழக்கில் 1வது இலக்க சொத்துகள் எது என்றால் தெரியாது. வழக்கில் 2வது இலக்க சொத்துகள் எது என்றால் 5ம் பிரதிவாதி ராமன் வீடு கட்டியுள்ள சொத்து, 8 செண்ட், 16 செண்ட், 42 செண்ட் என்று மொத்தம் 2 ½ ஏக்கர் சில்லரை இருக்கும். நான் சொல்லும் வழக்கு 2வது இலக்க சொத்துகள் குறித்து வழக்கு தாக்கல் செய்த தேதி மற்றும் நடப்பு தேதியில் உள்ள வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்

செய்துள்ளேன். நான் சொல்வது போல் 2வது இலக்க வழக்கு சொத்துகளுக்கு வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னென்ன ஆவணங்கள் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் படிப்பறிவு இல்லை என்பதால் சொல்ல இயலாது.

6) வா.சா.ஆ.3, 4 ஆனது 1986 மற்றும் 1988ம் வருடத்திற்கான அடங்கல் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் கட்டுப்பட்ட சொத்துகள் வழக்கு சொத்துகள் முழுமைக்கும் உரியது அல்ல என்றால் சரியல்ல, 3 சொத்துகள் கூட்டுக்குடும்ப சொத்தின் பலன்களின் வாயிலாக கிரையம் பெறப்பட்டுள்ளது. எல்லா சொத்துக்களும் கட்டுப்பட்டுள்ளது. நான் சொல்லும் 3 கிரைய சொத்துக்கள் எந்த சொத்துகள் என்று வா.சா.ஆ.3, 4 ஆவணங்களைப் பார்த்து சொல்ல இயலுமா என்றால் இயலாது. வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களில் கண்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்த தேதிக்கும், நடப்பு தேதிக்கும் உள்ள வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7) எனது கணவர் இன்றைய தினம் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். 1ம் வாதி நல்லம்மாள் என்பவருக்கு முத்தன் மகன் அடைக்கன் என்பவருடன் முதல் திருமணம் நடந்து அதன் வாயிலாக அழகுநாச்சி என்ற பெண் குழந்தை உள்ளது என்றால் இல்லை, காமாட்சி மற்றும் அழகன் என்ற தம்பதியினருக்கு பிறந்த குழந்தைதான் அழகுநாச்சி. இந்த விபரத்தை நான் எனது பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி நல்லம்மாள் சுரைக்கோடாங்கி மகன் அடைக்கன் என்பவரை 2வது திருமணம் செய்து கொண்டார் என்றாலும், அதன் விளைவாகதான் 5 வாதிகள் வாரிசுதாரர்கள் என்றால் 2வது திருமணம் கிடையாது, முதல் திருமணம்தான், சுரைக்கோடாங்கி மகன் அடைக்கன்தான் எனது தகப்பனார்.

8) நல்லம்மாளுக்கும், எம்.அடைக்கனுக்கும் பிறந்த அழகுநாச்சியை அக்கா மகள் என்ற முறையில் 5ம் பிரதிவாதி ராமன் திருமணம் செய்துள்ளார் என்றால் அந்த முறையில் திருமணம் செய்யவில்லை, ராமன் மனைவி எனது அம்மாவிற்கு பிறந்தவர் கிடையாது. 5ம் பிரதிவாதி ராமனின் மனைவி அழகுநாச்சி எனது தாயாருக்கு பிறக்கவில்லை என்று மறுத்து பதிலுரையோ, நிரூபண வாக்குமூலத்திலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 04.02.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.02.04 21:13:00 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்